# கல்லீரல் அழற்சியும் மஞ்சள் காமாலையும்




**டாக்டர்.ஆர்.கண்ணன்**
இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் உடல்பருமன்
**லேசர் மற்றும் லேப்ராஸ்கோப்**
**அறுவை சிகிச்சை நிபுணர்**



கல்லீரல் நமது உடம்பில் உள்ள உறுப்புகளில் மிக முக்கியமானது. உண்ணும் உணவு நன்றாக செரிமானம் ஆவதற்கும், இரத்தக் குழாய்கள் செம்மையாக இயங்கவும், உடலெங்கும் உள்ள தசைகளுக்கு வலிமை வழங்கவும், இதயத் துடிப்பு சீராக இயங்கவும், பல நோய்கள் வராமல் தடுக்கவும் கல்லீரல் தான் நமக்கு உதவுகிறது.

அந்த கல்லீரலின் செயல்பாட்டில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால், அது செரிமான மண்டலத்தைக் கடுமையாக பாதித்து விடும். மஞ்சள் காமாலை, *Cirrhosis*, கல்லீரல் அழற்சி *(Hepatitis)* மற்றும் கல்லீரல் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் உண்டாகும்.

இந்த வாரம் நாம் மஞ்சள் காமாலை பற்றிப் பார்ப்போம்.




**மதுவினால் ஏற்பட்ட கல்லீரல்**




**பித்த நாள அடைப்பு**



**மஞ்சள் காமாலை**



ஹெபட்டைடிஸ் B வைரஸ்

இரத்தத்தில் பில்லிரூபின் (Bilirubin) என்கிற மஞ்சள் நிறம் அதிகமாவதால் நோயாளியின் தோல் மஞ்சளாகவும், கண்களின் வெண்படலத்தில் மஞ்சள் நிறம் படிந்தும் காணப்படும். இதனையே மஞ்சள் காமாலை என்கிறோம். மஞ்சள் காமாலையில் மூன்று வகைகள் உள்ளன.

### *OBSTRUCTIVE JAUNDICE*

கல்லீரலில் ஒரு நாளைக்கு சுமார் 600 முதல் 750ml வரை பித்தநீர் உருவாகும். இதில் பெரும்பகுதி பித்தநீர் குழாய் வழியாக குடலுக்குள் சென்று ஜீரணத்திற்கு உதவும், சிறுபகுதி (60ml) பித்தநீர் குழாய் வழியாக பித்தப்பையை அடைந்து அங்கு சேமிக்கப்படும். குறிப்பாக கொழுப்பு அதிகமாகவுள்ள உணவு செரிக்க பித்தப்பை பித்தநீரைக் குடலுக்குள் செலுத்தும் வேலையைச் செய்கிறது.

பித்தநீர் செல்லும் பாதையில், பித்தக்கற்கள், பித்தநாளச் சுருக்கம் மற்றும் புற்றுநோய் காரணமாக அடைப்பு ஏற்பட்டால், பித்தநீரின் அளவு கல்லீரலில் அதிகமாகி, பிலிரூபின் அளவு இரத்தத்தில் அதிகமாகிறது. இதனையே *Obstructive Jaundice* என்கிறோம். இவர்களுக்கு சிறுநீர் அடர்கருப்பாகவும், மலம் வெளுத்தும் காணப்படும்.

### ஹெப்பட்டோ செல்லுலார் ஜான்டீஸ் - (Hepatocellular Jaundice)

இது இரண்டாவது வகை மஞ்சள் காமாலையாகும். இவ்வகை காமாலையில் கல்லீரல் செல்கள் சில நோய்களால் பாதிக்கப்படும் போது உண்டாகிறது. இவ்வாறு கல்லீரலானது நோயால் பாதிக்கப்படும் போது அது தன் வேலை சரிவர செய்ய முடியாத நிலையில், குறிப்பாக தன் வேலையில் ஒன்றான பித்த நீரை பித்தப்பைக்கு அனுப்ப முடியாத நிலை ஏற்படுவதால், கல்லீரலால் சுரக்கப்படும் அந்த பித்தநீர் அங்கேயே தங்கி, ரத்தத்தில் கலந்து தேங்கிவிடுவதால் ஏற்படும் மஞ்சள் காமாலைக்குத்தான் ஹெபட்டோ செல்லுலார் ஜான்டீஸ் என்று பெயர். இவ்வகை நோயாளிகளுக்கு சிறுநீர் அடர்கருப்பாகவும், மலம் இயல்பான நிறத்திலும் போகும்.

### HEMOLYTIC JAUNDICE

இந்த வகையில் இரத்த சிவப்பு அணுக்களின் வடிவம் மாறுபட்டு முட்டை போலிருக்கும். இந்த இரத்த சிவப்பணுக்களின் சவ்வு மெல்லியதாக இருப்பதால் 120 நாட்களுக்குள் அழிய ஆரம்பிக்கும். இந்நிலையை “ஹீமோலைசிஸ்” என்று கூறுகிறோம். இதனால், இரத்தத்தில் பில்லிரூபினின் அளவு அதிகரிக்கும். மேலும், மண்ணீரலின் செயல்பாடு குறைபாட்டினாலும் பில்லிரூபினின் அளவு அதிகரிக்கும். இதனையே *Hemolytic Jaundice* என்கிறோம்.

**மஞ்சள் காமாலை வருவதற்கான பொதுவான காரணங்கள்**

ரத்தத்தில் பித்த நீரின் அளவு அதிகரித்தல்

கல்லீரலை பாதிக்கும் சில நோய்கள் (Hepatitis Virus)

பித்த நீர்ப்பை மற்றும் பித்தநீர் குழாயில் ஏற்படும் அடைப்பு

ரத்த சிவப்பணுக்களின் சிதைவு

மது அருந்துதல்

மற்ற நோய்களுக்காக எடுக்கப்படும் அலோபதி

மருந்துகள்

மாசு பட்ட தண்ணீரில் காணப்படும் நோய்கிருமிகள்

பரம்பரை தன்மை

## அறிகுறிகள்

பசியின்மை

சோம்பல்

களைப்பு

வாந்தி

குமட்டல்

தலைவலி

உடல் எடை குறைவு

உடலில் அரிப்பு

சாதாரண காய்ச்சல் அல்லது குளிர்க்காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் இருக்கும்.

காமாலை முற்றிய நிலையில் தோல் பகுதி, கண்கள் மற்றும் நகப் பகுதிகளில் மஞ்சளாகவும், சிறுநீர், மலம் மஞ்சள் நிறத்துடனும் காணப்படும்.

மஞ்சள் காமாலையின் அறிகுறிகளுள் பசியின் மையும் ஒன்று. இது பலருக்கு இருக்கும் சாதாரண பிரச்சனைகளில் ஒன்றாக இருப்பதால், பலர் கண்டு கொள்ளமாட்டார்கள். ஆனால் இந்த அறிகுறியுடன், மஞ்சள் நிற சிறுநீர் மற்றும் வாந்தி போன்றவை ஏற்படுமாயின் அது மஞ்சள் காமாலைதான். வாந்தியும் பல காரணங்களால் ஏற்படும். ஆனால் தேவையில்லாமல் குமட்டல் அல்லது வாந்தி ஏற் பட்டால் அது ரத்தத்தில் பிலிரூபின் அளவு அதிக மாக உள்ளது என்பதற்கான அறிகுறிகளுள் ஒன்று.

## பரிசோதனை முறை

**இரத்த பரிசோதனை**

1.கல்லீரல் செயல்பாடு கண்டறிதல் (Liver Function Test)

2. Hepatitis-சை கண்டறிதல் (Hepatitis A, B, C Virus)

3. Ultrasound Andomen, CT Scan மற்றும் MRI Scan மூலம் பித்தநீர் பை மற்றும் பித்தநாளத்தின் அடைப்பை கண்டறிதல்.

4.சிறுநீர் மற்றும் மலப் பரிசோதனை.

**சிகிச்சை முறை**

மஞ்சள் காமாலைக்கான காரணங்களைப் பொறுத்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் மட்டுமே, மஞ்சள் காமாலை முற்றிலுமாகக் குணமாகும்.

மஞ்சள் காமாலை என்றால் கீழாநெல்லியை எடுத்துக் கொண்டால் சரியாகிவிடும் என சிலர் நினைப்பார்கள். அவ்வாறு இல்லாமல் மேற்கூறிய வாறு தகுந்த பரிசோதனை மேற்கொண்டு, சரியான சிகிச்சை முறையை மேற்கொள்ள வேண்டும்.

சாதாரண மஞ்சள் காமாலைக்கு கல்லீரலைப் பலப்படுத்தக் கூடிய மருந்துகளான Liv 52. Silymarin, Vitamin B12 போன்ற மருந்துகளை உட்கொள்ள வேண்டும். அதனுடன் கீழ்கண்ட உணவுமுறை களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

## உணவுமுறை

1)எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவு என்று உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடித்தாலே, மஞ் சள் காமாலையை நிச்சயம் முறியடிக்க முடியும். எண்ணெய் மற்றும் மிளகாய்த்தூள் இல்லாத சைவ உணவுகளை சாப்பிட்டு வந்தால் காமாலையின் வீரியத்தைக் குறைத்துவிட முடியும்.

2)நீர்ச்சத்துள்ள எல்லாவித பழங்களையும், சேர்த்துக் கொள்ளலாம்.

3)அரிசி கஞ்சி, ஜவ்வரிசி கஞ்சி, கரும்புச்சாறு, இளநீர் போன்ற நீராகாரங்களைக் கொடுப்பதும் நல்லது.

4)உணவில் உப்பைக் குறைத்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

5)அதிக கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகள், சிறிய அளவில் புரதம் உள்ள உணவுகள், மிகக்குறைந்த அளவு கொழுப்புச் சத்து உள்ள உணவுகள் என்ற சாப்பிடுவது நல்ல பலனைத் தரும்.

Prime
Indian Hospitals
Changing Lives...
1051, Poonamallee High Road,
Arumbakkam, Chennai-600 106
Ph : 91-44-2363 9999, 91 98844 93140
Email: *chairman@primeindianhospitals.com*
*primeindianhospitals@gmail.com*

Life Care
DKJ Hospital
CARE... with love
177/3, M.T.H. Road, Villivakkam, Chennai - 49.
Ph : 044-26180099, 044-43577755,
8754590905
email: *chennaigastro@gmail.com*
Web: www.chennaigastro.com
www.chennaigastroenterlogist.com